பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
11 03 2025 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இரண்டு நாள் பயணமாக மொரீஷியஸ் சென்றடைந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் 54 கோடியே 90 லட்சத்திற்கும் அதிகமான கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. பெண்கள், குழந்தைகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று மத்திய அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

4. செங்கல்பட்டு மாவட்டத்தில் 280 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

5. இந்திய மல்யுத்த சம்மேளனம் மீதான தடையை நீக்கி மத்திய விளையாட்டு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

>>>>>><<<<<<

இரண்டு நாள் பயணமாக மொரீஷியஸ் சென்றடைந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**Port Loui** விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் டாக்டர் **Navin Chandra Ramgoolam** பிரதமரை நேரில் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து, பிரதமருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

மொரீசியஸில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரும் பெருமளவில் திரண்டு வந்து பிரதமரை வரவேற்றனர்.

தமது பயணம் குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மொரீசியஸ் பிரதமர் விமான நிலையத்திற்கே நேரில் வந்து தம்மை வரவேற்றது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகவும், இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

தமது மதிப்புமிக்க நண்பரான மொரீசியஸ் பிரதமருடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தையின் போது, பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் குறித்து விவாதிக்கவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் திரு. **Dharam Gokhool**–லையும் இன்று சந்தித்து பேசுவதுடன், சமுதாய வரவேற்பு நிகழ்ச்சியிலும் உரையாற்றவிருப்பதாக திரு. நரேந்திர மோடி அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய வம்சாவளியினர் அளித்த வரவேற்பு தம்மை நெகிழ்ச்சியடையச் செய்ததாக கூறியுள்ள பிரதமர், இந்தியாவின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் நன்மதிப்புகளை அவர்கள் தொடர்ந்து கடைபிடித்து வருவது தம்மை பெரிதும் கவர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

வரலாற்று ரீதியான மற்றும் இதயப்பூர்வமான இந்த பிணைப்பு, பல தலைமுறைகளுக்கும் தொடர வேண்டும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் 54 கோடியே 90 லட்சத்திற்கும் அதிகமான கணக்குகள் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ள அவர், தமிழகத்தில் மட்டும் ஒரு கோடியே 69 லட்சத்து 57 ஆயிரம் கணக்குகள் தொடங்கப்பட்டு, இந்த கணக்குகளில் 5 ஆயிரத்து 669 கோடி ரூபாய் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு ஒரு கோடியே 22 லட்சத்து 69 ஆயிரம் **RuPay** அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்கள் வசிப்பிடங்களிலிருந்து 5 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் வங்கி அல்லது அஞ்சலக வங்கி கிளைகள் செயல்படுவதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துள்ள நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, கடந்த டிசம்பர் மாத நிலவரப்படி, பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன் 3 லட்சத்து 2 ஆயிரத்து 110 கோடி ரூபாயாக குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அதிகாரமளித்து பாதுகாப்பதுடன், அவர்களது ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் மகளிர் நிலை பற்றிய ஐ.நா ஆணையத்தின் 69வது கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பாலின சமத்துவத்திற்கான இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

மத்திய அரசின் முன்னோடித் திட்டங்களால் இந்தியாவில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்பட்டிருப்பதுடன், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உரிமைகள் மற்றும் சலுகைகள் அவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வாக்காளர் அடையாள அட்டை குளறுபடி மற்றும் நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இன்று காலை அவை கூடியதும், இப்பிரச்சினையை எழுப்பிய தி.மு.க, காங்கிரஸ், ஆம் ஆத்மி மற்றும் திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர்கள், அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு, இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் சிங் இக்கோரிக்கையை நிராகரித்ததால், உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக, தமிழக கல்வித்துறைக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வலியுறுத்தி திமுக கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ரஞ்சன்குடிக்கோட்டை, இந்திய தொல்லியல் ஆய்வுக் துறையால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த கோட்டையை தொல்லியல் அதிகாரிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆயிரத்து 285 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

280 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 47 திட்டப் பணிகளை திறந்து வைத்த அவர், நகர்ப்புறப் பகுதிகளில் பட்டா வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

497 கோடி ரூபாய் மதிப்பிலான ஐந்து திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், 508 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<

பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம், நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

இந்த மருந்தகங்கள் மூலம், தங்களது மருத்துவச் செலவு பெருமளவு குறைந்துள்ளதாக மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 41 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சவுதி அரேபிய இளவரசர் முஹமது பின் சல்மான், யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ ஆகியோரை, ஜெட்டாவில் நேற்று சந்தித்து பேசினார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் மேற்கொண்டுள்ள முயற்சியின் ஒரு பகுதியாக, யுக்ரைன் பிரதிநிதிகளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ இன்று ஜெட்டாவில் சந்திக்கவுள்ள நிலையில், சவுதி இளவரசர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அமெரிக்கா – யுக்ரைன் இடையே கனிம ஒப்பந்தங்கள் குறித்த உடன்பாட்டை இறுதி செய்யும் நடவடிக்கைகள் இந்த சந்திப்பின்போது மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகம், கேரளா மற்றும் புதுச்சேரியில் இன்றும் நாளையும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் எச்சரித்துள்ளது.

இதனிடையே, நெல்லை, தூத்துக்குடி, சிவகங்கை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் இன்று காலை முதல் பரவலான மழை பெய்து வருகிறது.

>>>>>><<<<<<

இந்திய மல்யுத்த சம்மேளனம் மீதான தடையை மத்திய விளையாட்டு அமைச்சகம் நீக்கியுள்ளது.

இந்த சம்மேளனம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

வீரர், வீராங்கனைகளின் தேர்வுகள் நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், உலக மல்யுத்த விதிமுறைகளை பின்பற்றியும் இருக்க வேண்டும் என்றும் அந்த அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்மூலம் ஜோர்டானின் அம்மானில் நடைபெறவுள்ள ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

>>>>>><<<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.